**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 142/2014**
**நாள் 28/11/2023,** செவ்வாய் **கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - முனுசாமி | த/பெயர் - ஜெயராமன் |
| வயது - 41 | தொழில் - |
| விலாசம் - பெரவள்ளூர் கிராமம், பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். | |

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி (PW1)**

நான் தாவா சொத்தை ஆறுமுகம் முதலியார் வாரீசிடம் இருந்து கிரையம் பெற்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.த.சா ஆ 2 ஆவணத்தில் 2வது பக்கத்தில் ஆறுமுகம் முதலியாரின் முன்னோர்களால் சம்பாதிக்கப்பட்டு அவர் காலத்திற்கு பிறகு ஆறுமுக முதலிக்கு கிடைக்கப்பட்டது என்று ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பிரமான வாக்குமூலத்தில் 3வது பக்கத்தில் தாவா சொத்து ஆறுமுகத்திற்கு சொந்தமானது என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண் 142/2014ல் 4வது பக்கத்தில் தாவா சொத்து ஆறுமுக முதலியாருக்கு பாத்தியப்பட்டு அனுபவித்து வந்த சொத்து என்று உள்ளது என்றால் சரிதான். வா.த.சா ஆ 2 கிரைய பத்திரத்தில் ஆறுமுகத்தின் முன்னோர்கள் சொத்து என்பதற்கு ஆதாரமாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா இல்லை. வழக்கு சொத்து 8 ஏக்கர் 86 சென்ட் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சொத்தில் 32 சென்ட் முனுசாமி மற்றும் அப்பாசாமி முதலியாருக்கு சொந்தமானது என எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி

நிலத்தில் 24 சென்ட் அப்பாசாமி முதலியாருக்கும் 8 சென்ட் முனுசாமி முதலியாருக்கும் பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அப்பாசாமி காலத்திற்கு பிறகு அவரது வாரீசுகள் 3 நபர்களும் தலா 8 ெ சன்ட் பிரித்துக்கொண்டனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பெரவள்ளூர் கிராமத்தில் 43 ஆண்டுகாலமாக உள்ளேன். ரங்கநாத முதலி, பெருமாள் முதலி, முனுசாமி முதலி, சண்முக முதலி, நாராயண முதலி, ஆறுமுக முதலி ஆகியோரை எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது எனது தகப்பனாருக்கு தெரியும். எனக்கு விற்பணை செய்த ஆறுமுகசாமி வாரீசுதாரர்களிடம் அவர்களின் பாட்டனார் பெயர் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் அவர் பெயர் நாராயண சாமி. நாராயணசாமிக்கு எத்தனை வாரீசு ஆறுமுக சாமி வாரீசு என்று மட்டும் எனக்கு தெரியும். கண்ணப்பன் என்று மற்றொரு வாரீசு உள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கு தாக்கல் செய்த பிரதிவாதிகள் பாஸ்கர் மற்றும் ரவி சென்னையில் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். எண்ணிடம் காண்பிக்கப்படும் உயில் ஆவணத்தில் ரங்கநாதன் முதலியார் பாரியால் ருக்மணியம்மாள் எழுதிய உயிலில் சொத்து விவரத்தில் சர்வே எண் 43/1ல் 8.86 ஏக்கர் என உள்ளது என்றால் சரிதான் மேற்படி சொத்து விவரம் **பி.த.சா ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**